மார்ச் - 2014

திருவள்ளுவர் ஆண்டு 2044

# செந்தமிழ்


தொகுதி : 58
பகுதி : 5

விலை ரூ. 10/-

திங்கள் இதழ்



மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு



13.02.2014 அன்று வாழ்விக்க வந்த வள்ளலார் என்ற பொருளில் மதுரை ஆதீனம் 292வது குருமகா சன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அவர்கள் அறக்கட்டளைச் சொற்பொழிவு ஆற்றினார்கள். உடன் செந்தமிழ்க் கல்லூரியின் செயலாளர் திருமிகு.கோச்சடை இரா.குருசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் செயலாளர் திருமிகு. இரா.அழகுமலை அவர்கள், செந்தமிழ்க் கல்லூரியின் தலைவர் திருமிகு. சு.வீரணசாமி அவர்கள், மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் துணைத் தலைவர் திருமிகு. க.முத்தையா பசும்பொன் அவர்கள் மற்றும் முதல்வர் முனைவர் மு.மீனாஅவர்கள்.

# செந்தமிழ்

(தோற்றம் 1903)


தொகுதி : 58 திங்கள் இதழ்

பகுதி : 5 திருவள்ளுவர் ஆண்டு 2044

மார்ச் 2014




வள்ளல் பாண்டித்துரைத்தேவர்

21.03.1867-02.12.1911

| இதழ்க் கட்டணம் | உள்நாடு | வெளிநாடு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | ரூ. 100 | ரூ. 600 |
| ஆயுள் கட்டணம் | ரூ. 1000 | |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000 | ரூ. 6000 |
| தனி இதழ்க் கட்டணம் | ரூ. 10 | |


ஆசிரியர்

**இரா. அழகுமலை** எம்.ஏ., எம்.ஃபில்.,

செயலாளர்,

மதுரைத் தமிழ்ச்சங்கம்,

மதுரை.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தமிழ்க்கவிதை வரலாற்றில் வள்ளலார் | இ. வீரசக்திவேல் | 4 |
| கம்பர் கவியின் கவின் ! | புலவர் சி. பாண்டுரங்கன் | 10 |
| பனையும் பயன்பாடும் | புலவர் ந. ஞானசேகரன் | 23 |
| புதுக்கவிதையும் புனைவுப்போக்கும் | இரா. கலைச்செல்வி | 24 |
| பாலியல் கொடுமைக்குப் புராணப் பாங்கில் தண்டனை | தமிழாகரர் தெ. முருகசாமி | 30 |
| ஒருஉ | ஆறுவிரல் ஐம்பொறி | 33 |
| சாக்ரடீசின் தணியாத் தாகம் ! | கவிவேந்தர் கா. வேழவேந்தன் | 35 |
| கைந்நிலையில் அகவெளிப்பாடுகள் | வீ. விஜயலட்சுமி | 36 |

# இதழ் மணம்

அன்புடையீர், வணக்கம்.

தமிழ்க்கவிதை வரலாற்றில் வள்ளலார் என்னும் கட்டுரையானது, வள்ளலாரின் சன்மார்க்கத்தின் கோட்பாடுகளே, ஈ.வே.ரா. வின் சுயமரியாதை இயக்கத்தின் சாராம்சம் என்றும், தமிழகத்தில் பெண்ணுரிமைக்கான முதல் குரல் வள்ளலாருடையது என்றும் எடுத்துக்காட்டி வள்ளலாரைப் புதிய கோணத்தில் அணுகியுள்ளமை பாராட்டுக்குரியதாகும்.

கம்பர் ஒரு கவிச்சக்ரவர்த்தி என்ற கருத்தாக்கத்திற்கு வலுவூட்டும் வகையில் புலவர் கி.பாண்டுரங்கன், நீண்டதோர் ஆய்வுக்கட்டுரையை வழங்கியுள்ளமை சிறப்பிற்குரியதாகத் திகழ்கிறது.

புதுக்கவிதையின் புனைவுப் போக்கானது, சமூக நிகழ்வுகளை ஒருங்கிணைத்து, படம் காட்டுவதாக அமைந்துள்ளது என்பதை இரா. கலைச்செல்வி தம் கட்டுரையில் எடுத்தியம்பியுள்ளார்.

இன்றைய வாழ்வியல் சிக்கல்களில் ஒன்றாகத் திகழும் பாலியல் கொடுமைக்குக் கடுமையான தண்டனையே வழங்கப்பட வேண்டும் என்றும், எந்தக் காரணங்கொண்டும் குற்றம் இழைத்தவன் தப்பிக்கக் கூடாது என்றும் புராணத்தை அடியொற்றி, தமிழாகரர் எழுதியிருப்பது காலத்திற்கேற்ற ஆய்வாக அமைந்துள்ளது.

தொடர்ந்து, இலக்கண நோக்கில் திருக்குறளை அணுகி வரும் ஆறுவிரல் ஐம்பொறியின் ஒரூஉ என்னும் தொடை வகையை விளக்கி எழுதியுள்ளமை மகிழ்விற்குரியதாக அமைந்துள்ளது.

அதிகமாக ஆராயப்படாத கைந்நிலை என்னும் பதினெண்கீழ்க்கணக்கு நூலில் அமைந்துள்ள அக வெளிப்பாடுகளை ஆய்வாளர் வி. விஜயலட்சுமி கட்டுரையாக்கித் தந்துள்ளார். பல்வேறு கோணங்களில் தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்துள்ள போக்கு இவ்விதழின் சிறப்பாக அமைந்துள்ளது.

**ஆசிரியர்**

# தமிழக்கவிதை வரலாற்றில் வள்ளலார்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இ. வீரசக்திவேல்
மேலைச்சிவபுரி

'தளை ஆறு' என்ற தலைப்பின் கீழ் பாரதிதாசன் சாதி, மதங்களைச் சாடுவதற்கு வள்ளலாரின் 'வேதாகமங்கள் என்று வீண்வாதம் பேசுகின்றீர்' எனத் தொடங்கும் பாடல் அடிப்படையாய் இருக்கின்றது. மரபுவழி நின்று பாடல்கள் இயற்றி வந்த வள்ளலார், காலத்தின் தேவை கருதி, தமிழ் இலக்கிய வரலாற்றில் புதிய மரபுக்கு வித்திட்டு மறுமலர்ச்சிக் கவிஞர்களின் முன்னோடியாகத் திகழ்கிறார். வள்ளலார் உருவாக்கிய புதியமரபு பாரதி, பாவேந்தர் ஆகிய இருவரால் செழிப்புற்று வளர்ந்தது என்றால் மிகையாகாது.

வள்ளலாருடைய பாடல்கள் ஆத்திகர் - நாத்திகர் என்ற வேறுபாட்டினைக் கடந்து சமூக முன்னேற்றம் காண விழைந்தவர்களிடம் பெரும் தாகத்தினை ஏற்படுத்தின. இந்த வகையில் பெரியாரைச் சான்று காட்டுவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். பெரியாரால் தொடங்கப்பட்ட சுயமரியாதை இயக்கத்தின பிறப்பிடம் சன்மார்க்கமாகும். பெரியாரிய ஆய்வாளர்களும் இக்கருத்தினை ஏற்றுக் கொள்கின்றனர். சுயமரியாதை இயக்கத்தின் தோற்றம் பற்றி திரு.வி.க. குறிப்பிடும் பொழுது "நாயக்கர் சுயமரியாதை எனது சன்மார்க்க இயக்கத்தினின்று பிறந்ததுதான். அதற்கும் இதற்கும் நூற்றுக்குத் தொண்ணூறு பங்கு ஒற்றுமை, பத்துப்பங்கு வேற்றுமை" என்று அவருடைய வாழ்க்கைக் குறிப்பில் எழுதியுள்ளார். திரு.வி.க. வள்ளலாரின் சன்மார்க்க நெறியில் நின்றவர் ஆவார். அதையே எனது சன்மார்க்கம் என்று குறிப்பிட்டுள்ளார். 'இறையுணர்வு' என்ற ஒரு நிலையை ஒதுக்கி விட்டு வள்ளலாரின் சன்மார்க்கக் கொள்கைகளையும் சுயமரியாதை இயக்கக் கொள்கைகளையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டும் ஒன்று என்பது புலப்படும். திரு.வி.க. குறிப்பிடும் பத்துப்பங்கு வேற்றுமை என்பது 'இறைநிலை' உணர்வைத்தான். ஆத்திகராக, கோயில் அறங்காவலராக இருந்த பெரியார் நாளடைவில் சாதி, சமய எதிர்ப்பாளர், வருணாசிரம எதிர்ப்பாளர், வேத புராணங்களின் எதிர்ப்பாளர் என்ற நிலைக்கு வருகின்றார்.

காங்கிரசிலிருந்து விலகி, 1925-ஆம் ஆண்டு பெரியார் 'குடியரசு' இதழ் தொடங்கும் பொழுது கூட இறை நம்பிக்கையாளராகவே இருந்துள்ளார். குடியரசு இதழைச் சைவ மடாதிபதியான ஞானியாரடிகளைக் கொண்டு வெளியிட்டுள்ளார். இதுபற்றி அவரே குடியரசு இதழில் குறிப்பிட்டுள்ள செய்தியை, "இப்பத்திரிகை ஆரம்பிக்கும் நோக்கம் தேசாபிமானம், பாஷாபிமானம், சமயாபிமானம் இன்னும் மற்ற விஷயங்களை ஜனங்களிடையே உணர்த்துவதேயாகும். செவ்வனே நடைபெற வேண்டுமாய் ஆசிர்வதிக்கும் படி சுவாமிகளை வேண்டுகிறேன்" என்று செல்வக்குமார் குறிப்பிட்டுக் காட்டுகின்றார். ஆக, பெரியார் என்ற இறைப்பற்றாளரை நாத்திகவாதியாக மாற்றியது வருணக்கோட்பாடுகளும், சமூகத்தில் தலை விரித்தாடிய தீண்டாமை, மூடநம்பிக்கை முதலிய கொடுமைகளும்தான் என்று தெளிவாகக் குறிப்பிடலாம்.

சன்மார்க்கத்தின் கோட்பாடுகள்தான் சுயமரியாதை இயக்கத்தின் சாராம்சம் என்பதை, பெரியாரை முன்னிறுத்தி விளங்கிக் கொள்வது இன்னும் சாலச் சிறந்ததாகும். சாதி, சமய, வருண, புராணங்களுக்கு எதிராகச் சுயமரியாதை இயக்கத்தினர் நின்றபொழுது, ஆத்திகர்களிடையே இருந்து வந்த எதிர்ப்புக்குரல் மிகவும் வலுவானது. இந்நிலையில் பெரியார் வள்ளலாரைக் கோடிட்டுக் காட்டுகிறார் அவை பின்வருமாறு.

மக்களைத் தத்தம் நிலையை அறியவொட்டாமல் மிருகங்களாக்குவதே இதிகாசங்களும் புராணங்களும். இழிநிலையில் வாழ வேண்டியதே இறைவனின் கட்டளையும் என எண்ணச் செய்வதே வேதங்களும சாஸ்திரங்களும். மக்கள் மானத்தை விட்டொழித்து மண்ணுலகில் மெய்மறந்து வாழவேண்டும் என்பதற்காகப் படைக்கப்பட்டதுதான் விசித்திரமிக்க கடவுளர்கள். இவை சுய மரியாதைக்காரன் கூறுவதுதான். இந்த மாதிரி சுயமரியாதைக்காரன் கூறுவது பொய்யா? உலகத்தில் யாராகவிருந்தாலும் அனைவருக்கும் அறிவுண்டு எனக் கூறுகிறவன் சுய மரியாதைக்காரன். ஆதலால் அறிவு பெற்று விளங்கும் ஆஸ்திகர்களே சிந்தியுங்கள்! நன்றாகச் சிந்தியுங்கள்.

கொள்ளைவினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயக்
கூட்டமுமக் கூட்டத்தே கூவுகின்ற கலையும்
கள்ளமுறு மக்களலைகள் காட்டியபல் கதியும்
காட்சிகளும் காட்சிதரு கடவுளரு மெல்லாம்
பிள்ளை விளையாட்டென.... (திருவருட்பா - 417-3)

என்று பேசுகின்றவர் யார் தெரியுமா?

நால்வருணம் ஆசிரமம் ஆசாரம் முதலா
நவின்றகலைச் சரிதமெல்லாம் பிள்ளைவிளை யாட்டே
(திருவருட்பா – 4174)

என்பவர் யார்?

இயல்வேதா கமங்கள்புரா ணங்கள்இதி காசம்
இவைமுதலா இந்திரசா லங்கடையா உரைப்பர்
மயலொருநூல் மாத்திரந்தான் சாலமென அறிந்தார்
மகனேநீ நூலனைத்தும் சாலமென அறிக
(திருவருட்பா – 4176)

என்று பறைசாற்றுபவர் யார் தெரியுமா?

இப்படித்தான் பெரியாரின் ஆவேசக்குரல்கள் வள்ளலாரின் பாடல்களோடு எழுந்துள்ளன. வள்ளலாரின் சன்மார்க்கக் கருத்துகளை ஆத்திகர்களைக் காட்டிலும் நாத்திகரான பெரியார் சரியாகப் புரிந்து கொண்டு, நடைமுறைப்படுத்தினார் என்பதில் ஐயமில்லை. ஆக, திராவிட இயக்க வரலாற்றிலும் வள்ளலார் தவிர்க்க முடியாத இடத்தைப் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும். வள்ளலாரின் பாடல்களை வரலாற்று நோக்கில் பார்க்கும் பொழுதுதான் அவரிடத்துப் படிப்படியாகத் தோன்றிய சிந்தனையையும், புலமை வீச்சையும், சமூகக் கண்ணோட்டத்தையும் உணர முடிகின்றது. தாம் வாழ்ந்த காலத்தைச் சரியாகப் புரிந்து கொண்டதால் தான் அவரால் சரியான ஒரு புது நெறியை உருவாக்க முடிந்தது. அவருடைய பாடல்கள் நீர்த்துப் போன பழைய மரபுகளைப் புறந்தள்ளி, புதிய போக்கிற்கு வழிகாட்டின. புரட்சிக் கருத்துகளையும் சமுதாயச் சிந்தனைகளையும் விதைக்கும் ஆளுமைகளை உருவாக்கின.

வள்ளலார், கவிதைப் படைப்பில் குறிப்பிடத் தகுந்த மாற்றத்தினை ஏற்படுத்தியதைப் போன்று, புரையோடிக் கிடந்த சமுதாயத்திலும் மாற்றத்தினை ஏற்படுத்த விழைந்தார். அதற்காகச் சாதி, மதம், புராணம், இதிகாசம், வேதம், ஆகமம், பெண்ணடிமைத்தனம் இவற்றினை முன்னிறுத்தி அனைத்தையும் கேள்விக்குள்ளாக்கினார்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பல்வேறு வகைகளில் நாட்டில் சீரழிவு ஏற்பட்டிருந்த போதிலும், சாதியாலும், மதத்தாலும் ஏற்பட்ட சீரழிவுகள்

அதிகமாக இருந்தன. இச்சூழலில் சாதி பற்றியும், மதம் பற்றியும் நன்கு புரிந்து கொண்ட வள்ளலார் அவற்றினைப் பின்வருமாறு எடுத்துரைத்தார். சாதியும் மதமும் பொய்; சுயநலக்காரர்களால் உருவாக்கப்பட்டவை; இவற்றில் எந்த உண்மையும் இல்லை; ஒருபோதும் கடவுளருளைக் காட்டாதவை; உயிரிரக்கத்திற்குத் தடையாக நிற்பவை; சமத்துவ சமுதாயத்திற்குப் பெரிதும் பங்கம் விளைவிப்பவை என்று பல்வேறு இடங்களில் எடுத்துக்காட்டினார். சாதி, மதம், வருணாசிரமம் குறித்த வள்ளலாரின் சாடல்கள் ஏராளம். இருப்பினும் ஒரு சில இடங்களைக் காட்டலாம்,

"சாதியிலே மதங்களிலே சமயநெறி களிலே
சாத்திரச் சந்தடிகளிலே கோத்திரச் சண்டையிலே"
(திருவருட்பா – 5566)

"இருட்சாதித் தத்துவச் சாத்திரக் குப்பை
இருவாய்ப்புப் புன்செயில் எருவாக்கிப் போட்டு"
(திருவருட்பா – 4564)

"சாதியும் மதமும் சமயமும் பொய்யென
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ் சோதி"
(அ.ஜோ.அகவல் – 211 – 212)

எனப் பல்வேறு சாதிமதங்களை வன்மையாகக் கண்டித்து, அவற்றினைக் குழிதோண்டிப் புதைக்கச் சொன்னார். வேதாகமங்கள், இதிகாச புராணங்கள், புனிதநூல் தத்துவங்கள் அனைத்தையும் 'சந்தைப்படிப்பு' என்றும் 'சாத்திரக்குப்பை' என்றும் சாடி நின்றார். இவற்றில் உள்ள புரட்டு வேலைகள், கட்டுக்கதைகள், புழுகல், மாயாஜாலங்கள் அனைத்தையும் வெளிப்படுத்திக் காட்டினார். ஆக, இந்தியத் தத்துவ மரபில் தூக்கிப் பிடிக்கப்பட்டு வந்த வேதாகம, புராண, இதிகாசங்களைத் தமிழ்க்கவிதை வரலாற்றில் பக்திநெறி நின்று முதன்முதலில் புரட்டிப் போட்டவர் வள்ளலார் ஆவார். அதே நேரத்தில் மதவாதிகளையும் கண்டிக்கத்தவறவில்லை. வள்ளலாரிடத்து மதம் என்பது வேறு; இறை என்பது வேறு என்ற தெளிந்த சிந்தனை இருந்தது. இறையுணர்விற்கு அவர் எந்த மதச்சாயமும் பூசவில்லை. இறையுணர்வை / ஆன்மிகத்தை அடைவதற்கு வள்ளலார் காட்டிய ஒரே வழி சீவகாருண்யம் மட்டும். வள்ளலாரைப் பொறுத்தவரைக்கும் கடவுள், வழிபாடு, மோட்சத்தின் திறவுகோல் எல்லாமும் சீவகாருண்யமே ஆகும். எனவேதான், உயிரிரக்க உணர்வை (சீவகாருண்யம்) அழுத்தமாக வலியுறுத்தினார்.

இளமைக்காலத்தில் வள்ளலார் சைவ சமயத்தின் மீது எல்லையற்ற பற்று வைத்திருந்தார். ஆன்மிக மீதேற்றமும் அனுபவ அறிவும் பெருகிட அது இருந்த இடம் தெரியாமலே போயிற்று. சித்தி வளாகப் பகுதியில் நிகழ்த்திய உபதேசத்தில், தனக்குச் சமயத்தின் மீதிருந்த பற்று அற்ப அறிவால் உண்டானது என்றும், சைவம் முதலான மதங்களின் மீது இலட்சியம் வைக்க வேண்டாமென்றும் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

மானுட சமுதாயத்தில், குறிப்பாக இந்தியாவைப் பொறுத்த மட்டில் பெண்களுக்கு இழைக்கப்பட்டு வந்த கொடுமைகள் - கட்டுப்பாடுகள் - மறுக்கப்பட்ட உரிமைகள் சொல்லி மாளாது. பெண்சிசுக்கொலை, கைம்பெண்நோன்பு, உடன்கட்டை ஏற்றுதல், குழந்தைத் திருமணம், பொட்டுக்கட்டிவிடுதல், கல்வி மறுக்கப்பட்டமை, சொத்துரிமை மறுக்கப்பட்டமை, மறுமண மறுப்பு, தீட்டு முதலியன பெண்ணிய முன்னேற்றத்திற்கு முள்வேலி போட்டு நின்றன. இந்நிலையில் 19 ஆம் நூற்றாண்டில் தோன்றிய சீர்திருத்த இயக்கங்கள் இவற்றிற்கு முற்றுப்புள்ளி வைக்க முற்பட்டன. தமிழ்ச்சூழலில் பெண்ணுரிமைக்கான முதல் புரட்சிக்குரல் வள்ளலாரிடத்தில் இருந்து வந்தது என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அதாவது, கணவன் இறந்து விட்டால் மனைவி தாலி இழக்க வேண்டிய அவசியமில்லை; பூ வைத்துக் கொள்ளலாம்; பொட்டு வைத்துக் கொள்ளலாம் என்று வலியுறுத்தி, கைம்மைநிலையைச் சமுதாயத்தில் இ--ந்து விரட்ட முனைந்தார். அதே வேளையில், மனைவி இறந்துவிட்டால கணவன் மறுமணம் செய்தல் கூடாது என்பதை ஆணித்தரமாகக் கூறினார். பாரம்பரியம் மிக்க தமிழக்கவிதை வரலாற்றில் வள்ளலாரின் கலகக்குரலைப் போன்று வேறு யாம் பதித்திலர். தமிழ்ச்சமூகம் இது வரையிலும் கண்டிராத மாபெரும் புரட்சிக்குரல் வள்ளலாருடையது. பெண்கல்வி குறித்தும், பெண்ணிய தற்காப்புகள் குறித்தும் ஆழப்படப் பேசுகின்ற இன்றைய சூழலில் 19 ஆம் நூற்றாண்டிலேயே இவற்றினை முன்வைத்தவர் வள்ளலார் ஆவார். "பெண்களுக்கு யோகம் முதலிய சாதனங்கள் அவசியம் கற்பிக்க வேண்டியுள்ளது. மேலும் பேதமற்று அபேதமாய்ப் படிப்பு முதலியவைவும் சொல்லிக் கொடுக்க வேண்டியுள்ளது" (உரைநடைப்பகுதி) என்பது வள்ளலாரின் தொலைநோக்குச் சிந்தனையாகும்.

பெண்ணுரிமைக்காக வள்ளலார் கொடுத்த மற்றொரு கலகக்குரலையும் நோக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். ஆன்மிகத்தைப் பொறுத்தவரைக்கும் பெண்கள் தகுதியற்றவர்கள்,

வேண்டுமானால் ஆணின் ஆன்மிக வாழ்க்கைக்குப் பணிவிடை செய்யலாம் அவ்வளவுதான். எந்த மதத்திலும் பெண்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டுள்ளதாகவோ, பெண்ணை மையமிட்டு புனிதநூல் எழுதப்பட்டுள்ளதாகவோ சான்றுகள் இல்லை. தொன்றுதொட்டுப் பெண்ணினம் அடிமைப்பட்டு வருவதற்கு மதங்கள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. ஏனென்றால், மதங்கள் ஆணாதிக்கத்தின் இன்னொரு முகம். இதற்கு எந்த மதமும் விலக்கல்ல. கொல்லாமையை வலியுறுத்திய சமண, பௌத்த மதங்கள் தமிழக மண்ணில் ஒழிந்துபட்டதற்குப் பெண்ணை ஓர் உயிராக மதிக்காமையும் ஒரு காரணமாகும். இந்த மதங்கள் ஆன்மிக வாழ்க்கைக்குப் பெண்கள் தகுதியற்றவர்ள்; அவர்களால் ஆன்மிகத்தை அடையமுடியாது; ஆணாக இருந்தால் மட்டுமே ஆன்மிகத்தை அடைய முடியும் என்று வலியுறுத்தின.

இப்படி மதங்களால் பெண்ணினம் ஒதுக்கப்பட்டுத் துன்புறுவதைக் கண்ட வள்ளலார், தம்முடைய சன்மார்க்க வழிபாட்டில் ஆணுக்கு நிகராகப் பெண்ணுக்கும் உரிமையுண்டு என முழங்கினார். அதனைச் செயற்படுத்தியும் காட்டினார். அவரைப் பொறுத்தவரைக்கும் ஆண் – பெண் என்ற வேறுபாடு முற்றிலும் நீங்கி, இருவரும் சமம் என்ற நிலைப்பாடு எய்த வேண்டும் என்பதுதான் குறிக்கோள். இதனை அருட்பெருஞ்சோதி அகவலில், "ஆணினுள் பெண்ணும் பெண்ணினுள் ஆணும் அண்ணுற வகுத்த அருட்பெருஞ்சோதி" என்று மிகவும் நுட்பமாகக் குறிப்பிடுவர்.

இராமலிங்க வள்ளலாரால் தமிழ் இலக்கியப் படைப்புச் சூழல் தன்னைப் புதிய போக்கிற்கு ஆட்படுத்திக் கொண்டது. பொருளாதாரம், அரசியல், வழிபாடு, பெண்ணியம், சாதி சமயம், சடங்கு சம்பிரதாயம் இவை குறித்து அவர் எழுப்பிய விமர்சனங்களும் வினாக்களும் 19 ஆம் நூற்றாண்டில் ஆன்மிகத் தளத்தில் சலசலப்பை ஏற்படுத்தின. அவையே இன்றைய சூழலில் இலக்கியங்களாய் விரிகின்றன; சமூக நிலையில், சமுதாயச் சிந்தனைப் போக்குகளை உண்டாக்கி வருகின்றன. "மாக்ஸையும் இராமலிங்க சுவாமிகளையும் இணைத்துப் பேசுவது விந்தையாகத் தோன்றலாம். இருவருடைய கனவுகளும் ஒன்றே" (காலச்சுவடு அக்டோபர் 2011). இந்நிலையில் வள்ளலாரின் வருகையைத் தமிழ்ச்சூழலில் மாபெரும் திருப்புமுனை என்று குறிப்பிடுதல் தகும்.

# கம்பர் கவியின் கவின் !

புலவர் சி. பாண்டுரங்கன்
ஆம்பூர்

## கம்பர்

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்
வள்ளுவர்போல் இளங்கோ வைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை,
உண்மை வெறும் புகழ்ச்சியில்லை!"

– மகாகவி பாரதியார்

கல்வி சிறந்த தமிழ்நாடு – புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு! – மேலவர்

## தமிழ்த்தாயின் தவத்தால் பிறந்தவர்

....."எவரும் போற்றிடவே – தமிழில்
இராம கதைபுனைந் தோன்;
புவனம் உள்ளளவும் – அழியாப்
புகழ் பரந்திடு வோன்....
.....தேவி அருள்பெற்றான் – தமிழ்த்தாய்
செய்தவத் தால்பிறந் தான்....
.....கம்பன் கவிவாழ்க! – இராம
காதை நிதம் வாழ்க!
அம்புவி மீதெங்கள் – அருமை
அமுதத் தமிழ் வாழ்க!

எத்திக்கும் போற்றும் இராமன் திருக்கதையைத்
தித்திக்கும் 'செந்தமிழில்' செய்தளித்து – நித்தமும்
அம்புவியில் மக்கள் அமுதம் அருந்தவைத்த
கம்பன் கவியே கவி!" – கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

## கம்பர் கவிச்சிறப்பு

"தமிழ்மொழி தனக்கொரு தவச்சிறப்பைத்
    தந்தது கம்பனின் கவிச்சிறப்பே;
அமிழ்தம் தமிழ்மொழி என்பதுவும்
    அழியா திருப்பது கம்பன்தாம்
கம்பனை மறந்தால் தமிழ்ஏது?
    கவிதை என்பதும் கமழாது!
அம்புவிக் கவிஞருள் அரசாகும்
    அவனே தமிழ்மொழிப் பரிசாகும்!
கற்பனை சிறந்தது கம்பன்சொல்;
    கலைத்திறம் நிறைந்தது கம்பன்சொல்!
அற்புதச் சித்திரம் அவன்பாட்டு;
    அறிவுக் கினிப்பதிங் கவன்பாட்டு!"

– நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்

## 'நூல்' பற்றி, நன்னூல் பவணந்தி கூறியன

1. பஞ்சிதன் சொல்லாப் பனுவல் இழையாகச்
செஞ்சொற் புலவனே சேயிழையா – எஞ்சாத
கையேவா யாகக் கதிரே மதியாக
மையிலா நூல்முடியும் ஆறு.

2. உரத்தின் வளம்பெருக்கி உள்ளிய தீமைப்
புரத்தின் வளமுருக்கிப் பொல்லா – மரத்தின்
கனக்கோட்டம் தீர்க்குநூல் அஃதேபோல் மாந்தர்
மனக்கோட்டம் தீர்க்குநூல் மாண்பு.

## இராமாவதாரம் ( கம்பராமாயணம்) நூல்

தலைசிறந்த இதிகாசங்கள் எனப்புகழ் பெற்றவை இரண்டு நூல்கள். அவையாவன, இராமாயணம், மகாபாரதம். இராமாயணத்தை வடமொழியில் இயற்றியவர் மூவர், வால்மீகி, வசிட்டர், போதாயனர். கம்பர் இராமாவதார

மாக்கதையைத் தமிழில் இயற்றினார். காண்டங்கள் ஆறு, பாடல்கள் பத்தாயிரத்தை விஞ்சிய எண்ணிக்கை. கம்பர் இயற்றிய வேறு நூல்கள்:

1. சரசுவதியந்தாதி 2. ஏரெழுபது 3. திருக்கை வழக்கம்

4. சடகோபரந்தாதி 5. மும்மணிக்கோவை

இராமாவதாரம் இன்று, கம்பராமாயணம் என்னும் பெயரால் பரவலாகக் குறிக்கப்படுகிறது.

## சிந்தனைக் களஞ்சியம்

சிந்தனைக் களஞ்சியம் ஆ. சிங்காரவேலு முதலியார் உருவாக்கிய தமிழ்க்கலைக்களஞ்சியமாகிய 'அபிதான சிந்தாமணி', அறிஞர்கள் உவந்து போற்றும் அற்புதமான நூலாகும்; மதுரை (நான்காம்) தமிழ்ச்சங்கத்தை நிறுவிய வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவர் இந்நூலை அச்சேற்றிப் பிரசுரம் செய்வித்ததையும், 'செந்தமிழ்' இதழின் பல அரிய செய்திகள் தமக்கு உதவிய வகையையும் பொன்நேர் போற்றி நன்றி பாராட்டியுள்ளார் இந்நூலாசிரியர். மணியின் நேராம் இந்நூலில்,' கம்பர்' என்னும் தலைப்பில் உள்ள செய்திகள், சுவையும் பயனும் மிக்கவை; கம்பர் நூல்கள் பற்றிய தகவல்கள் பல ஏந்தியவை.

## கம்பரை ஆதரித்தோர்

குலோத்துங்கச் சோழனும், திருவெண்ணெய் நல்லூர்ச் சடையப்ப வள்ளலும் இராமன்மாக்கதை பாடிய கம்பரை ஆதரித்தவர்கள்.

## நூல் தொடக்கமே கவின்

'உலகம்' என்னும் சொல்லால், கம்பராமாயணம் தொடங்குகிறது; இச்சொல் மங்களகரமான சொல்லாகும். (எளியேன் எழுதிய கட்டுரைச்சோலை நூலில், தனிக்கட்டுரை, 'இலக்கிய உலகம்' காண்க.)

வணங்கிய நாணல் பிழைக்கும்; வணங்கிய வில் இலக்கை வெல்லும். கம்பர் கடவுள் வணக்கப் பாடல்களாக முதல்மூன்று பாடல்களை அமைத்துள்ளார். தமிழில் தோய்ந்த அவர்தம் நெஞ்சம், தமிழ்ப் பாத்தேன் சேர்த்துவைத்த மலைத்தேன் கூடெனத் திகழ்ந்ததெனலாம். எடுத்துக்காட்டு பா 3:

'ஆதி அந்தம் அரியென யாவையும்
ஓதினார் அலகு இல்லன உள்ளன
வேதம் என்பன - மெய்ந்நெறி நன்மையன்
பாதம் அல்லது பற்றிலர் - பற்று இலார்'.

இப்பாடலில் அமைந்துள்ள சொற்களின் கவின் (கவின் = அழகு, பண்பு), அவை நினைவூட்டும் தொடர்களால் மிளிர்கின்றதெனின் சற்றும் மிகையாகாது. ஆன்மிகக் கோட்டத்தின் முதற்படியில் நின்று, அகரத்தை உச்சரிப்பவருக்கும், அப்பாடலின் சொற்கள், பல தொடர்களை நினைவூட்டுகின்றன.

| | | |
|---|---|---|
| ஆதி | - | 'ஆதிபகவன் முதற்றே உலகு' |
| அந்தம் | - | 'ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதி'; 'ஆதியனே அந்தம் நடுஆகி அல்லானே' |
| ஓதினார் | - | 'ஓதவுலவா ஒருதோழம் தொண்டருலன்' |
| அலகு இல்லன | - | 'அலகு இல் சோதியன்' |
| உள்ளன | - | 'இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே' |
| மெய்ந்நெறி நன்மையன் | - | 'தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள் ஊற்றான உண்ஆர் அமுதே' |
| பாதம் | - | 'போற்றி அருளுக நின் ஆதியாம் பாதமலர்' |
| பற்று | - | 'பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு' |
| வேதம் | - | 'வேதம் நான்கினும் மெய்ப்பொருளாவது, நாதன் நாமம்' |

"அரியேறே, என்அம் பொற்சுடரே, செங்கட் கருமுகிலே,
எரியே பவளக் குன்றே நாற்றோள் எந்தாய் உனதருளே,
பிரியா அடிமை என்னைக் கொண்டாய் குடந்தைத் திருமாலே,
தரியேன் இனிஉன் சரணம் தந்தென் சன்மம் களையாயே!"
– நம்மாழ்வார் திருவாய்மொழி, ஐந்தாம் பத்து. 8 : 7

இவ்வாறு, ஒரே கவிதை, ஒன்பது தொடர்களை நினைவூட்டுகிற அற்புத நுட்பத்தோடு சொற்களைப் பெய்து தொடங்கும் கம்பர் கவிதையின் கவின், தொடர்ந்து படிக்க ஆர்வமூட்டுகிறதன்றோ?

திருக்குறள், திருவாசகம், பெரியபுராணம், சம்பந்தர் தேவாரம், (நாலாயிரம்) திவ்வியப் பிரபந்தம் ஆகிய ஐந்து இலக்கியங்களின் பாடல் அடிகளை, இராமாவதாரம் என்னும் கம்பராமாயணத்தின் தொடக்க மூன்றாம் பாடல் நினைவூட்டுவதை எண்ணும்போது, கம்பர், நற்றமிழ் இலக்கியங்களில் தோய்ந்த நெஞ்சினர் என்னும் உண்மை, உள்ளங்கை நெல்லிக்கனிநேர் புலப்படும்.

## தொல்காப்பியம் தெளிந்தவர் கம்பர்

பல்லாயிரம் ஆண்டுகளாக வேர்விட்டு, விழுதூன்றி,பல்லுயிர்ப் பெருக்கத்துக்குப் படிக்கல்லாகி, வானத்து நீல ஏட்டில் கிளையென்னும் எழுதுகோல்களால், பசுமை மொழிப்பாக்களை, பகல் என்னும் பக்கங்கள் தோறும் எழுதி மகிழ்ந்து, அதன் வாசகர்களுக்குப் பழமும் நிழலும் மென்தென்றலும் பரிசளித்து மகிழ்கின்ற மாபெரும் ஆல்போல் அமைந்து, அழகு தமிழர்தம் நெஞ்சங்களில் கோலோச்சும் நூல் தொல்காப்பியம். இலக்கணங்களின் இமயம்; இலக்கிய வெள்ளம் உருவாக்கும் கங்கை; 247 எழுத்துப் பொற்கோப்பை ஏந்தியுள்ள தமிழமுது.

தொல்காப்பியக் கருத்துகளில் திளைத்தவர் கம்பர், எடுத்துக் காட்டு

"மரபுநிலை திரியா மாட்சிய ஆகி,
உரைபடு நூல்தாம் இருவகை இயல –
முதலும் வழியும் என நுதலிய நெறியின.
வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்.
வழியெனப் படுவது அதன்வழித்து ஆகும்.
வழியின் நெறியே நால்வகைத்து ஆகும்.
தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலொடு, அனைமர பினவே". – தொல்காப்பியர்

தொல் பொருள், மரபியல் 95 முதல் 99 வரையுள்ள இந்நூற்பாக்கள், நூல் இருவகை : 1. முதல்நூல் 2. வழிநூல் என்பதையும், வழிநூல்வகை நான்கு என்பதையும் விளக்குகின்றன. இவற்றையெல்லாம் நெஞ்சில் நிறுத்தி, நூல் எழுதிய கம்பநாடரின் விளக்கப்பதிவு ஆவணம் அமைந்த கவிதையின் கவினைப் பாருங்கள்: பாடலின் முதல்அடி, இந்நூலுக்குரிய முதல் நூலின்

மொழியைச் செப்புகின்றது; 1-2 அடிகள், அக்கதையைப் பாடிய மூவர் பற்றிக் குறிக்கின்றன; 2,3,4 ஆம் அடிகள், வால்மீகி கதையைத் தழுவித் தமிழில் கம்பர் தாம் பாடிய கருத்தை முன்வைக்கிறார்.

## நூல் வரலாறு

தேவ பாடையின் இக்கதை செய்தவர்
மூவர் ஆனவர் தம்முளும், முந்திய
நாவினான் உரையின்படி, நான்தமிழ்ப்
பாவினால் இதுஉணர்த் தியபண்பு அரோ!

– கம்பராமாயணம், பாலகாண்டம், பாயிரம், பாடல் எண் 10.

தமிழ்வளநகர் மதுரையின் சிறப்புகளில் ஒன்றாகி மிளிரும் மதுரை மல்லிகையை மாலை தொடுத்து அணிவித்து அழகு பார்ப்பவர், மல்லிகைச் சரங்களின் ஊடே பிணைத்துப் பூடகமாக நின்றுதவும் நார்/ பஞ்சுநூல் கொள்கின்ற பங்கையும் மறவார். அதுபோல, கம்பநாடர் , கம்பராமாயணத்தை இயற்றத் தம்பங்கை அள்ளி அள்ளி வழங்கிடத் தமிழ் இலக்கண/ இலக்கிய நூல்களின் பாங்கை, நூல் பயிலும் வாசகர் என்றும் மறவார்.

## தமிழ்நூல்களின் பெருமை

தமிழுக்குப் பெருமை சேர்க்கும் திருக்குறளும், கம்பராமாயணமும் கிடைத்தல் அரிதாக இருந்த நிலை கண்ட வள்ளல் பொன். பாண்டித்துரைத்தேவர், தமிழ்வளர்ச்சியில் தமிழகமே போற்ற, உலகமே வியக்க,(அருந்தொண்டினைத் தற்போது 113 ஆம் ஆண்டு தொடர்கின்ற) மதுரை (நான்காம்) தமிழ்ச்சங்கத்தை, 14.9.1901 ஞாயிறு அன்று மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளி மண்டபத்தில் நிறுவினார்.( நன்றி: தினமணி, செம்மொழிக்கோவை சிறப்புமலர், பக்கம் 55; மதிப்பிற்சிறந்த மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் பெருந்தகையாளர்கள் வெளியிட்ட முழுப்பக்கத் தகவல் தொகுப்புக் குறிப்பு அறிக்கை).

வரலாற்றின் பக்கத்தைப் பொன் எழுத்துகளால் நிரப்பும் இந்நிகழ்வு, வள்ளல் பொன். பாண்டித்துரைத் தேவரின் தமிழ்ப்பற்றையும், திருக்குறள் மற்றும் கம்பராமாயணம் முதலாய தமிழ்நூல்களைக் கண்ணிகர் போற்றிய பெருமையையும் உணர்த்தும்.

## தமிழைப் போற்றும் கம்பர் நெஞ்சம்

1. அகத்தியர் இலக்கணஞ் செய்ததைக் கம்பநாடர் பாடல்:
   'சுடர்க் கடவுள் தந்ததமிழ் தந்தான்'.
2. 'என்றுமுள தென்தமிழியம்பி இசை கொண்டான்'
   என்றவாறு தமிழின் தொன்மையை இவ்வடிகளில் உணர்த்தினார்.

## கம்பர் கவிகாட்டும் கனிவான நன்றி

விதையின்மேல் ஈரம் பரவி, தன்வரவை உணர்த்திய மழைக்குத் தன் நன்றியைக் கூற, மழைமேகம் எங்கே என வினாக்குறி வடிவு காட்டி, ஈரமண்ணைக் கூன் முதுகால் ஓரம்கட்டி, நீலவானை நோக்கிப் பச்சைக் கொடியாக விதையிலை நீண்டு காற்றில் அசைந்து, புன்னகையின் முத்திரைபோல் செடியாகிறது!.

மழைமுகிலை, மகிழ்வுந்தின் நேர் வேகத்தில் சுமந்து வந்த காற்றுக்கு, நறுமணம் பரப்பி நன்றி பாராட்டுவதுபோல, நறுமணம் கமழும் மலர்களைப் போர்த்த மரம், மகரந்தப் பொன்தூளைக் காற்றில் தூவி, புதுமலர்களையும் தூவுகின்றது.

இவ்வாறு, ஓரறிவு உயிர்களின் இயல்பே உன்னதம் எனில், ஆறாம் படியில் உயர்ந்து நிற்கும் மனிதனின் நிலையாது?

'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்ற லரிது'

'நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றேமறப்பது நன்று'

என்பன குறட்பாக்கள். தமிழர்தம் நன்றி மறவாப் பண்பை, கவினை, வெளிப்படுத்தும். ஈற்றடி கொண்டு உயர்வது, கம்பர் பாயிரம், பாடல்–11.

'நடையின் நின்றுஉயர் நாயகன் தோற்றத்தின்
இடைநிகழ்ந்த இராமாவதாரப் பேர்த்
தொடை நிரம்பிய தோம்அறு மாக்கதை
சடையன் வெண்ணெய்நல் லூர்வயின் தந்ததே!'

## 100% ஈகை வள்ளல் மேகம்

ஆற்றுப் படலம் பா - 4,

'புள்ளி மால்வரை பொன்னனல் நோக்கிவான்
வெள்ளி வீழ்இடை வீழ்த்தெனத் தாரைகள்,
உள்ளி உள்ளஎல் லாம் உவந் தீயுமவ்
வள்ளி யோரின் வழங்கின மேகமே!'

தாய்ப்பால் போல், உயிர்களைக் காக்கும் நீர் தந்து காக்கிறது சரயு (பா-12), வணிகரைப் போலச் சிறந்தும் (பா-7), வானவில்லைப் போல மனம் கவர்ந்தும் (பா-8).

## பெருகும் வெள்ளம்

'மணியும் பொன்னும் மயில்தழைப் பீலியும்
அணியும் ஆனை வெண்கோடும் அகிலும் தண்
இணைஇல் ஆரமும் இன்னகொண் டேகலான்
வணிக மக்களை ஒத்ததவ் வாரியே!
பூநிரைத்தும், மென் தாது பொருந்தியும்
தேன ளாவியும் செம்பொன் விராவியும்
ஆனை மாமத ஆற்றொடு அளாவியும்
வான வில்லை நிகர்த்ததவ் வாரியே!'

## மணம் கமழும் ஆறு (பா - 13)

'கொடிச்சியர் இடித்த சுண்ணம் குங்குமம் கோட்டம் ஏலம்
நடுக்குறு சந்தம் சிந்தூ ரத்தொடு நரந்தம் நாகம்
கடுக்கைஆர் வேங்கை கோங்கு பச்சிலை கண்டில் வெண்ணெய்
அடுக்கலின் அடுத்ததீம்தேன் அகிலொடு நாறும் அன்றே!'

### சரயு

கோசலம் செழிக்க, அயோத்தி அணிபெற, சரயு நதி பெருக்கெடுத்துப் பாய்கிறது; நதி மானசரசில் தோன்றியதால், சரயு எனப் பெயர் பெற்றது. வசிட்டை, இராமகங்கை என்னும் பெயர்களும் உள! பாலகாண்டம், ஆற்றுப்

படலம் இருபது பாடல்கள் அமைய கம்பர் பாடியுள்ளார். முதல் நான்கு பாடல்கள், வான்கொடை மழைவளத்தையும், அடுத்த ஏழு பாடல்கள் வெள்ளப் பெருக்கையும், நிறைவு ஒன்பது பாடல்கள் நதியின் சிறப்பையும் பேசுவன. இவை, தமிழ் இலக்கிய வளத்தை வியக்கும் கம்பர் மனம் காட்டுவன.

## ஒப்பு நோக்கல்

ஆற்றுப் படலம் 20 பாடல்களின் கருத்தோடு ஒப்பு நோக்கத்தக்க தமிழிலக்கிய அடிகள் ஏராளம் உள. எடுத்துக்காட்டு:

**சிலப்பதிகாரம், இளங்கோவடிகள் (கானல் வரி)**

உழவர் ஓதை மதகோதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி....

– கோவலன், மாதவி, காவிரியைப்பாடிய ஆற்றுவரி.

பூவார் சோலை மயில் ஆலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி.....
.......வாழி அவன்தன் வளநாடு மகவாய் வளர்க்கும் தாயாகி
ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி......

– மாதவி, காவிரியைப் பாடிய ஆற்றுவரி

### வையை

.....புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி
வையை யென்ற பொய்யாக் குலக்கொடி.......
.....குரவமும் வகுளமும் கோங்கமும் வேங்கையும்
மரவமும் நாகமும் திலகமும் மருதமும்
சேடலும் செருந்தியும் செண்பக ஓங்கலும்
பாடலம் தன்னொடு பன்மலர் விரிந்து
குருகும் தவளமும் கொழுங்கொடி முசுண்டையும்
விரிமலர் அதிரலும் வெண்கூ தாளமும்
குடசமும் வெதிரமும் கொழுங்கொடிப் பகன்றையும்........
.....,அருவி முல்லை அணிநகை யாட்டி.....

– சிலம்பு, புறஞ்சேரி இறுத்த காதை.

## பேரியாறு

..... கோங்கம் வேங்கை தூங்குஇணர்க் கொன்றை
நாகம் திலகம் நறுங்கா ழாரம்
உதிர்பூம் பரப்பின் ஒழுகுபுனல் ஒளித்து
மதுகரம் ஞிமிறொரு வண்டினம் பாட
நெடியோன் மார்பில் ஆரம் போன்று
பெருமலை விளங்கிய பேரியாற்று.....

– சிலம்பு, காட்சிக் காதை

## 1. வெள்ளம்

திக்குக்க ளெட்டுஞ் சிதறி – தக்கத்
தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட தீம்தரிகிட
பக்க மலைக ளுடைந்து வெள்ளம்
பாயுது பாயுது பாயுது – தாம்தரிகிட
தக்கத் ததிங்கிட தித்தோம்......

– மகாகவி பாரதியார்

## 2. வெள்ளப் பெருக்கு

வெள்ளப் பெருக்கினைப் பார்க்கை யிலும் அதன்
வேகத்தின் சித்தத்தைக் கேட்கையிலும்
உள்ளம் திகைத்தோர் உண்மை அறிவினை
ஊட்டுது; தெய்வத்தைக் காட்டுது பார்!

– நாமக்கல் கவிஞர், வெ.இராமலிங்கம்

## 3. ஆறு

கல்லும் மலையும் குதித்துவந்தேன் – பெருங்
காடும் செடியும் கடந்து வந்தேன்;
எல்லை விரிந்த சமவெளி – எங்கும்நான்
இறங்கித் தவழ்ந்து தவழ்ந்துவந்தேன்.......
மாங்கனி தேங்கனி வாரிவந்தேன் – நல்ல
வாச மலர்களும் அள்ளி வந்தேன்

தீங்கரும்(பு) ஆயிரம் தள்ளிவந்தேன் – மிகத்
தேனும் திணையுமே சேர்த்து வந்தேன்
– கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

## 4. நீர் ஊற்றுகள்

சாரலும் தண்மாலை நாயகியைச் சாரக்
குயில்கூவிக் கொண்டிருக்கும் கோலம் மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும் வாசமுடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்றநீர்
ஊற்றுகள் உண்டு; கனிமரங்கள் மிக்க உண்டு;
பூக்கள் மணம் கமழும்; பூக்கள்தோறும் சென்றுதே
னீக்கள் இருந்தபடி இன்னிசைபா டிக் களிக்கும்!
– பாவேந்தர் பாரதிதாசன்

## நாடும் நகரமும்

அகில உலகமும் அறிந்துள்ள மாநதி, புண்ணிய நதியாகிய கங்கை, மாவீரன் அலெக்சாண்டர், தன்நாட்டுக்குத் திரும்பிச் செல்லும்போது எடுத்துச் சென்ற ஐந்து பொருள்களுள் கங்கையின் நன்னீரும் இராமாயணச் சுவடியும் இருந்தன என்னும் வரலாற்றுக் குறிப்பு வியப்பூட்டும். மாரிக்காலத்தில் மழையாலும், கோடைக் காலத்தில் இமயத்தின் சிகரப்பனி உருகியும் ஆண்டு முழுவதும் உயிரூட்டும் என்னும் வரம் பெற்ற கங்கைக்கு வடக்கில் அமைந்து, கங்கையின் உபநதியாகிய சரயுவால் வாழ்வும், வளமும் பெற்றுத் திகழ்ந்த நாடு கோசலம்; அதன் தலைநகர் அயோத்தி மாநகரம். இவற்றை முறையே, நாட்டுப் படலம் பற்றி 61 பாடல்கள், நகரப் படலம் பொருட்டு 75 பாடல்கள் கவிப்பேரரசு கம்பர் பாடியுள்ளார்.

## நாட்டுப் படலம்

வால்மீகி புகழ்ந்து பாடிய அக்கோசல நாட்டை, அன்பு என்னும் தேன் உட்கொண்டு, (வாய் பேசாமலிருந்த குறை நீங்கி ஒருவன்) பேசுதல் தொடங்கியதைப் போல் தானும் புகழ முற்படுவதாகக் கம்பர் பணிந்துரைத்தார், (பா.1) கோசலம் நீர்வளம் மிக்க நாடு ஆதலின், முத்து, பவளம், சங்கு, நீர் மதகுகள் நிரம்ப உள! மண்வளம் மிக்கதாதலின் பொன் வளமுண்டு, கால்நடைச் செல்வங்களுக்கோ குறைவில்லை; நெற்களங்களை அடுத்துள்ள

தாழ்குழியிலும் குவளை மலர்கள் பூத்துக் குலுங்கும்; நெல்வயல்களில் அன்னங்கள் திரியும்; அழகிய சோலைகளில் ஏராளமான மலர்களில் மகரந்தம்/ தேன் சேகரிக்க வரும் தேனீக்களின் களியாட்டத்திற்கோ சற்றும் குறைவில்லை; கூட்டம் கூட்டமாக வரும் அவை சேகரிக்கும் தேன்அடைகளில் நிரம்பி எங்கும் நிறைந்துள்ளதால், உழவு செய்யாமல் விடுத்த சிறுநிலம் கூட, கரம்பு எனும் நிலை பெறாமல். தேனடைகள் மிகுந்த மரச்சோலை என்னும் உயர்வைப் பெறும். நாம் இத்தனை அடிகளில் அறிந்த செய்தியை, நான்கு அடியில், ஒரே பாடலில் கம்பர், கவின் ததும்பப் பாடினார்,

வரம்பு எலாம் முத்தம், தத்தும் மடைஎலாம் பணிலம் மாநீர்க்
குரம்பு எலாம் செம்பொன், மேதிக் குழிஎலாம் கழுநீர்க் கொள்ளை,
பரம்பு எலாம் பவளம், சாலிப் பரப்பெலாம் அன்னம் பாங்கர்க்
கரம்பெலாம் செந்தேன், சந்தக் காஎலாம் களிவண் டீட்டம்!

– நாட்டுப் படலம் பா. 2

நீர்வளம், நிலவளம், பயிர்வளம், உயிர்வளம், சோலைவளம் காட்டும் பாடல் 6,

நீரிடை உறங்கும் சங்கம்; நிழலிடை உறங்கும் மேதி;
தாரிடை உறங்கும் வண்டு; தாமரை உறங்கும் செய்யாள்;
தூரிடை உறங்கும் ஆமை; துறையிடை உறங்கும் இப்பி;
போரிடை உறங்கும் அன்னம்; பொழிலிடை உறங்கும் தோகை!

நம்நாட்டிலிருந்து அயல்நாட்டுக்குப் பணிநிமித்தம் செல்வோர்தம் மனத்தும் அவ்வப்போது முற்பட்டு நிற்பது நம்தாயத்திருநாட்டின் பெருமையும், கலையும், பண்பாடும், நாகரிகமும், கலாச்சாரமுமே யன்றோ? அந்நிலை போலவே, கோசல நாட்டுவளம் காட்டும் கம்பர்தம் நெஞ்சிலும் நினைவிலும், பாவிலும் கற்பனையிலும், சொல்லிலும் பொருளிலும், முன்வந்து நிற்பது, முக்கனி நேர் முத்தமிழ் வளர் தமிழகமே! இக்கருத்து, தொடர்ச்சியாகப் பாக்களைப் படித்துச் சுவைப்பவர்க்கு உருவாதல் திண்ணம். எடுத்துக்காட்டாக, ஒரு பாடலின், ஓரடியை இங்கு காண்போம்,

## விருந்து

.....விருந்தினர் முகம் கண்டு அன்ன விழா அணி விரும்புவாரும்.....

– பால., நாட்டுப் படலம், பா 15, அடி 4.

இவ்வடியில், கால்புள்ளியை அன்ன என்னும் சொல்லுக்கு முன்னோ பின்னோ மனத்துள் கொண்டு நிறுத்தி, பொருள் சிறப்பை அறிந்து உவகை கொள்ளலாம்.

ஒப்புடன் முகம் மலர்ந்து, உபசரித்து, உண்மை பேசி ( விருந்து = புதுமை; விருந்தினர் = புதியதாக அவ்வூருக்கு வந்தவர் ) விருந்தோம்பும் முறையை ஔவையார் பாடினார். திருவள்ளுவர், ஓர் அதிகாரம் முழுமையும் இடமளித்து, பண்பாட்டு நெறியைப் பாதுகாத்து வழியமைத்தார்.

## விருந்தோம்பல்

முதல் பாடல்

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு. – திருவள்ளுவர்

## தொல்காப்பியம்

கற்பும், காமமும், நற்பால் ஒழுக்கமும்,
மெல்லியல் பொறையும், நிறையும் வல்லிதின்
விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்,
பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்
முகம்புகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்
அகம்புகல் மரபின் வாயில்கட்கு உரிய

– பொருள் அதிகாரம், கற்பு இயல், நூற். 11.

தொல்காப்பியர், விருந்து புறந்தருதல் வாயிலாதலை உணர்த்தினார். இவ்வடிப்படையில், சங்கப் பாடல்கள் நிரம்ப, அணிப் பொன்னாடைப் போர்த்தி ஒளிவீசுகின்றன. (இவற்றுள், பதினைந்து குறிப்புகளை அமைத்து, சங்ககாலத் தமிழரின் விருந்து என்னும் தலைப்பில் ஒரு கட்டுரையை, எளியேனின் கட்டுரைச் சோலை நூலில் சேர்த்துள்ளேன்.)

(தொடர்ச்சி அடுத்த இதழில்...)

## இரங்கல் செய்தி

மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் முன்னாள் செயலாளரும், செந்தமிழ்க் கல்லூரியின் முன்னாள் தாளாளருமாகிய **திரு. மா. தனுக்கோடி பாண்டியன்,** பி.ஏ.பி.எல்., அவர்கள் 22.02.2014 அன்று இறைவனடி சேர்ந்தார். பிரிவால் துயருற்று வாடும் அன்னாரின் குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**ஆசிரியர்**

# பனையும் பயன்பாடும்

புலவர் ந. ஞானசேகரன், திருலோக்கி

தெங்கெனவே நெடிதுயர்ந்து நிற்கும் காயுள்
 தீஞ்சுவை சேர் பனைநுங்கு தின்ன வாய்க்கும்
அங்கிருக்கும் சிறுபாளை அரிந்தால் பால்தான்
 அதில்சுண்ணாம் பைக்கலந்தால் பதநீர் ஆகும்
கொங்கையன்ன பனங்காய்கள் குலையாய்த் தொங்கும்
 குருத்தோலைத் தோரணங்கள் அழகாம் எங்கும்
பங்களிப்பாய்ப் பனைஓலைக் கலைநுட்பத்தில்
 பாங்கான மாளிகைவா யிலும் அமைப்பர் !

முக்கண்ணாம் பனங்காயைப் பகுத்துப் பார்த்தால்
 முழுச்சுளைகள் விழித்தவண்ணம் விழுங்கச் சொல்லும்
தக்கவண்ணம் நீரதற்கே தராத போதும்
 தான்வளர்ந்து மேலுயர்ந்து மரமாய் நிற்கும்
பக்குவத்தால் பனம்பாலும் கள்ளாய் மாறும்
 பனைவெல்லம் கற்கண்டோ இனிக்கும் தேனாம்
அக்கால எழுத்தோட்டம் ஓலைத் தாளாம்
 அரிச்சுவடி எழுத்தாணி பாலர் பாடம்

பனைமரத்து நிறம்கறுப்பு வைரம் உள்ளே
 பனங்கிழங்கோ வெண்கொக்கின் மூக்கு போலே !
வனைகின்ற கூரைக்கே உதவும் மட்டை
 வளைவிசிறி அசைந்தாலே வீசும் காற்று
பனைமரங்கள் உறுப்பீந்தே ஈகியாகும்
 பாரத்தைச் சுமக்கும் உத் திரமாய்த் தூணாய்த்
தினையளவு நன்றிக்கும் பனைதான் நின்று
 திருக்குறளில் உவமையதாய் மின்னும் தானே !

# புதுக்கவிதையும் புனைவுப்போக்கும்

இரா. கலைச்செல்வி
புதுக்கோட்டை

## முன்னுரை

மேலைநாட்டு இலக்கியத்தின் தாக்கத்தால் தமிழ்க்கவிதை வரலாற்றில் ஏற்பட்ட வளர்ச்சி நிலையே புதுக்கவிதை. பாரதியார் வசன கவிதை அமைப்பில் புதுக்கவிதையைத் தமிழுக்குக் கொண்டுவந்தவர். கவிதையானது மரபுக்கவிதை, புதுக்கவிதை என இருவகைப்படும். மரபுக்கவிதை என்பது இலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுதப்படுவதாகும். பொருள் இருவகைக் கவிதைக்கும் அடிப்படை, எனினும் மரபுக்கவிதையில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்ற அனைத்துச் செய்யுள் உறுப்புகளும் சரியாக அமைந்து வரும். புதுக்கவிதை பொருளை மட்டும் அடிப்படையாகக் கொண்டு இயல்பாய் அமையும். புதுக்கவிதைகள் சமூக நிகழ்வுகளை ஒருங்கிணைத்து அப்படியே நமக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவற்றுள் சிலவற்றை இக்கட்டுரை வெளிக்காட்ட முனைகிறது.

## வானம்பாடி

1930 – களில் தொடங்கிய புதுக்கவிதையானது பொருள் மாறாமல் வடிவம் மட்டும் மாறி வளர்ந்துள்ளது. அது தனக்கென அறுபதுகளின் இறுதியில் 'வானம்பாடி' என்னும் இயக்கம் வழியாக வளர்ச்சிநிலை பெற்றது.

"நாங்கள்
வானம்பாடிகள்; மானுட
கானம்பாடிகள்; உழைப்பு
ஞானம் பாடிகள்"

இக்கவிஞர்களின் சொல்லம்புகள் அனலைக் கக்கின, ஆட்சியாளர்களின் உடல் நெளியவும், பாட்டாளிகளின் உடல் நிமிரவும் உந்து சக்தியாக உதவின.

## அப்துல் ரகுமான்

முப்பதுவாக்கில் தோன்றிய புதுக்கவிதை வளர்ச்சி அடைந்தது இவருடைய காலத்தில் எனலாம். புதுக்கவிதையின் வடிவமும், பொருளும் இவரது கவிதைகளில் சிறப்பாக அமைந்துள்ளன. பால்வீதி, சுட்டுவிரல், நேயர் விருப்பம், கரைகளே நதியாவதில்லை ஆகிய கவிதைத் தொகுப்புகள் இவருடையவை. ஆலாபனை என்ற இவரது கவிதை நூலுக்கு 2001 ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருது கிடைத்துள்ளது. இவருடைய கவிதைகள் ஆழ்ந்த கருத்துக்களுடனும் படிப்பதற்கு எளியதாகவும் அமைந்துள்ளன.

"வணிகர்களே!
உங்களையும் நீதிபதியாக மதித்து
உங்களுக்கும் தராசு தரப்பட்டது.
ஆனால் என்ன விபரீதம்!
அவர்கள் வியாபாரம் செய்ய
ஆரம்பித்து விட்டார்கள்
நீங்களோ
தண்டனை தரத்தொடங்கி விட்டீர்கள்"

## ஈரோடு தமிழன்பன்

தமிழ்ப் புதுக்கவிதை வரலாற்றில் குறிப்பிடத்தகுந்தவர். ஊமை வெயில், தோணி வருகிறது, கண்ணுக்கு வெளியே சில கணங்கள், கிழக்குச் சாளரம், தமிழன்பன் கவிதைகள் எனப் பல தொகுதிகளாக இவருடைய கவிதைகள் பரிணமித்துள்ளன. மனிதனுக்கு நகைச் சுவை உணர்வு வேண்டும் என்பதை விளக்கும் இவருடைய கவிதை வரிகள்.

"கன்னி கழியாமலே
ஒரு பெண்
கண்மூடி விடுவதைப் போல
ஒருமுறை கூடச்
சிரிப்பு வரையப்படாமலேயே
சில உதடுகள்
புதைகுழி செல்கின்றன"

## சக்திக் கனல்

சக்திக்கனலும் குறிப்பிடத்தக்க புதுக்கவிஞர். எத்தனை ஆறுகள் நம் நாட்டில் பெருக்கெடுத்தாலும் வியர்வை என்னும் நதி ஓடினால் மட்டுமே மக்கள் செம்மாந்து வாழமுடியும் என்பதை,

"இங்கு
கங்கை நதி பாய்ந்தாலும்
காவிரி நடந்தாலும்
கோதாவரி, கிருஷ்ணா
கும்மாளமிட்டாலும்
வியர்வை நதி பாயாமல் – மக்களுக்கு
விமோசனமே கிடையாது"

என்ற கவிதை வரிகளால் சுட்டிக்காட்டியுள்ளார்.

## மீரா

கவிஞர் மீ. ராசேந்திரன், கனவுகள் + கற்பனைகள் = காகிதங்கள் என்ற புதுக்கவிதைத் தொகுப்பின் வழியாகப் புகழ்பெற்றவர். ஒன்றைப் பற்றி எப்படி எழுதவேண்டும் என்பதற்கு இலக்கணமாக நிற்பவை இவருடைய கவிதைகள்.

"உனக்கென்ன
ஒரு பார்வையை
வீசி விட்டுப் போகிறாய்
என் உள்ளமல்லவா
வைக்கோலாய்ப் பற்றி எரிகின்றது.

உனக்கென்ன
ஒரு புன்னகையை
உதிர்த்து விட்டுப் போகிறாய்
என் உயிரல்லவா
மெழுகாய்
உருகி விழுகிறது"

மேற்கண்ட கவிதைவரிகள் நடப்பியலை/ எதார்த்தத்தை எப்படி இலக்கியமாக மாற்ற வேண்டும் என்பதைப் பதிவு செய்துள்ளதை நாம் பார்க்க முடிகிறது.

## மேத்தா

புதுக்கவிஞர்கள் வரிசையில் மிகவும் முக்கியமானவர்; நீங்காத இடம் பிடித்தவர் மு. மேத்தா ஆவார். கண்ணீர்ப் பூக்கள் என்ற கவிதைத் தொகுப்பு இவருடைய கவிதைத் திறனை நமக்குப் பறைசாற்றி நிற்கின்றது.

"விஞ்ஞானிகளுக்கு ஒரு
விண்ணப்பம்
கண்ணீரைக் குடிநீராக்கும்
மார்க்கத்தைக்
கண்டுபிடியுங்கள்
இந்தியாவில்
இருக்கவே இருக்காது
தண்ணீர்ப் பஞ்சம்"

இக்கவிதை வரிகளினால் நாட்டில் நிலவும் தண்ணீர்ப் பஞ்சத்தை / பற்றாக்குறையைச் சுட்டிக் காட்டுவதோடு கண்ணீரில் கைகழுவும் மக்களின் அவலநிலையையும் குறிப்பிட்டுள்ளதைக் கவனித்தல் வேண்டும்.

## வைரமுத்து

கவியரசு கண்ணதாசனுக்கு அடுத்தாற்போல் திரைத்துறையிலும், கவிதை உலகிலும் முத்திரை பதித்தவர் வைரமுத்தே ஆவார். கவிராஜன் கதை, தண்ணீர் தேசம், கள்ளிக்காட்டு இதிகாசம் போன்றவை இவரது கவிதைத் திறனுக்குச் சான்றுகளாகும். நாட்டின் விடுதலையால் மக்கள் பெற்ற பயனைக் கீழ்க்காணும் கவிதையில் குறிப்பிடுகின்றார்.

"என்ன தந்ததாம்
இந்தச் சுதந்திரம்?
அப்பனின் திருவோட்டைப்
புத்திரனுக்கும்
இது புதுப்பித்துத் தந்தது.
வெளிநாட்டினர் இட்ட
விலங்கை உருக்கி
உள்ளூர் விலங்குகள்
உற்பத்தி செய்ததும்"

## சோம. இராசேந்திரன்

இவர் ஒரு கல்லூரிப் பேராசிரியர். “கறுப்புச் சூரியனும் சிவப்பு நிலாக்களும்” என்பது இவரது முதல் கவிதைத் தொகுப்பாகும். இவரது பாடுபொருள்களின் தெரிவுகள் செறிவுடையவை. எடுத்துக்காட்டாக, ஆசிரியர்களின் நடைமுறை எதார்த்தங்களைப் பாடம் என்ற தலைப்பின் கீழ் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

செத்துத் தொலைக்கலாம்
நான்
உங்களிடம் இருப்பதை விட.....
ஏதோ
அறிவுரை சொன்ன
அம்மாவிடம்.
அறிவிருக்கா?.....
டிபன் பாக்சில் ஒட்டியிருந்த
சோறு துடைக்க மறந்த
மனைவியை.
சனியனே.....
காலநேரம் தெரியாமல்
காலைப்பிடித்து அழுத
குழந்தையை.
ஒழிஞ்சு போ........
வாசலில் மிதிவண்டியில்
மூட்டையோடு திணறி
குறுக்கே வந்த முதியவரை.
பொறுக்கி.....
கல்லூரி வாசலில்
கவனிக்காமல்
மோதிவிட்ட மாணவனை.
எருமை.......
வகுப்பில்
வருகைப்பதிவு சொல்லாமல்
வேடிக்கை பார்த்த மாணவியை.
எல்லாம்
முடிந்தபின்
பாடம் தொடங்கினேன்
இன்று நடத்த வேண்டிய
அதிகாரம்
இன்சொல் கூறல்

என்ற கவிதையின் வழியாகப் பேச்சில் இல்லாத இன்சொல் பாடப்பொருளில் இருப்பதை ஆசிரியர் தெளிவுபடுத்தியுள்ளார்.

## முடிவுரை

இன்றைய புதுக்கவிதை வரலாறு நாளும் பல கவிஞர்களை உருவாக்கி வருவதுடன், தானும் நாளும் பல களங்களைக் கண்டு, பல்வேறு சமூக நிகழ்வுகளைப் பதிவு செய்து எப்படி வாழவேண்டும் என்ற இலக்கினை வரையறை செய்து பீடுநடை போடுகிறது.

# வாசகர் வாசகம் 1

அன்புள்ள செந்தமிழ் ஆசிரியர் அய்யா,

அவர்கட்கு வணக்கம்.

2014 பிப்ரவரி செந்தமிழில் பேராசிரியர் மதிப்புமிகு வெ. பெருமாள்சாமி அவர்கள் "ஒன்பதின் ஒய்யாரம் சில துணைக்குறிப்புகள்" என எழுதிய பாங்கு வெகு சிறப்பாக இருந்தது. அது ஒரு தனித்த எண் எனத் தெளிவு படுத்திய பாங்கும் பாராட்டுக்குரியது.

"இனிக் கணித நிலையில்" என எழுதிக் காட்டியதில் "8" என்ற எண்ணை விட்டு விட்டு 9, 18, 81 எண்ணால் பெருக்கிக் காட்டி முடிவில் ஒன்பது வரும் அற்புதத்தைக் காட்டினாலும், அதில் ஒரு சிறு திருத்தம் காணலாம். அதாவது 8 என்றதை விடாமலே சேர்த்து உறழ்ந்தாலும் (பெருக்கினாலும்) முடிவில் 9 வரும்.

**I.** 123456789 X 9=1111111101 - எண்ணும் போது 9 ஆம். இதில் சுழியனிற்கு (ஜீரோ) மதிப்பில்லை.

**II.** 123456789X18 = 987654312

123456789

2222222202 = 18 = 9

**III.** 123456789X81 = 123456789

987654312

9999999909 = 81 = 9

எனவே, ஜீரோவுக்கு மதிப்பில்லை என்பதால் ஒன்பதின் ஒய்யாரம் வியப்பில் ஆழ்த்துகிறது.

ஆனால், அடுத்து அ, ஆ எனக் குறித்தெழுதிய எண்களின் முறையில் 9 வருவதற்கான தெளிவு எளிமையாக இல்லை. வலிந்து அறிய வேண்டியுள்ளது. ஒன்பது என்பது IX என்ற உரோமானிய முறையைப் போன்றது என்ற கருத்து சிறப்பாம். இதனை ஒன்று குறைந்த பத்து என்பதாகப் புதுச்சேரித் தமிழறிஞர் சுந்தர சண்முகனார் "ஒன்பது தொண்ணூறு" என்ற கட்டுரையில் குறித்துள்ளார்.

பேராசிரியர் திரு. பெருமாள்சாமி அவர்களுக்குப் பாராட்டு! நன்றி!

அன்பன்

**தெ. முருகசாமி**, புதுச்சேரி

# பாலியல் கொடுமைக்குப் புராணப் பாங்கில் தண்டனை

தமிழாகரர் தெ. முருகசாமி
புதுச்சேரி - 3

புராணம் என்றாலே புளுகுமூட்டை எனப் பலர் தள்ளினாலும் குப்பையிலே கோமேதகம் கிடைப்பதான அரிய உண்மைகளும் புராணத்தில் பொதிந்து கிடக்கின்றன.

இன்றைக்கு எத்திசை நோக்கினும் பாலியல் புகார்கள், பாலியல் கொடுமைகள் செய்திகளாக உலாவந்த வண்ணம் உள்ளன. 'காமம் காழ்கொளின் கற்றவும் கைகொடா' என்று சிந்தாமணி கூறும் கருத்தின் படி இன்னார் இனியர் என்றில்லாமல் காம இச்சையில் மூழ்கிய கொச்சைக் கூட்டுகள் பெண்களைப் பாலியல் கொடுமைக்கு ஆளாக்கும் செய்தி நோயாகப் பரவி வருகிறது.

இத் தீமைக்கான தண்டனை கடுமையாக இல்லாததால்தான் இக்குற்றம் பெருகி வருகிறதோ என எண்ணத் தோன்றுகிறது. மேலும் இப்பாலியல் வன்முறை புரிவோர்க்கு உரிய காலத்தில் தண்டனையும் கிடைக்காததாலும் இத்தீமை வளர்ந்து வரக் காரணமாக உள்ளதோ என்றும் கருதத் தோன்றுகிறது!.

இவற்றை நீக்க எடுக்கும் முயற்சிகள் பலவாறாக இருந்தாலும், பழைய நூல்களில் இதுபற்றித் தண்டனையாகக் கூறியுள்ளதைக் கருத்தில் கொள்வது தக்க பயனுடையதாகும்.

ஒரு காலத்தில் மதுரையை ஆண்ட குலோத்துங்க பாண்டியனது ஆட்சியில் நடந்ததான பாலியல் கொடுமைக்கு இறைவனே தண்டனை அளித்ததாகப் பைந்தமிழ்ப் பரஞ்சோதியார் பாடிய திருவிளையாடல் புராணத்தில் ஒரு தீர்வு உள்ளதை இன்றைக்கான சான்றாகக் கொள்ளலாம்.

வான் பயிற்சியில் சிறந்த சித்தன் என்பவன் தனக்கு வான் பயிற்சியளித்த ஆசிரியருக்குத் துரோகமாக அவரின் மனைவி மீது காமமுற்றவனாய் ஒருநாள் அவரில்லாதபோது பெண்டாள நினைத்துக்

கையைப் பற்றியிழுத்தான். 'சிறை காக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர் நிறைகாக்கும் காப்பே தலை' என்ற குறளின்படி (577) ஆசிரியரின் மனைவி தன் மனமாகிய காவலின்படி அவனைப் புறந்தள்ளி வீட்டுக் கதவினைத் தாழிட்டுத் தனது கற்பைக் காத்துக் கொண்டாள்.

இதனை வெளிப்படுத்தினால் சமூக அளவில் தனக்கு இழுக்கு நேரிடும் எனக் கருதித் தன் கணவனிடமும் கூறாமல் மதுரை ஆலவாய் அண்ணலிடம் முறையிட்டு இவ் விழுக்கைக் களைய வேண்டினாள்.

இதனால் அவள் வேதனையை முற்றாக உணர்ந்த இறைவனும் அவளின் வேதனையைத் தீர்த்தருள நினைத்ததோடு அப்பாதகனுக்குத் தண்டனை கொடுப்பதன் வழியாகப் பாலியல் கொடுமைக்கான விழிப்புணர்வை உலகமறியச் செய்யத் திட்டமிட்டார்.

வாள் பயிற்சியில் தனக்கு ஒத்தாரும், உயர்ந்தாரும் இல்லையெனத தருக்குக் கொண்டிருந்த அச்சித்தனிடம் வாளாசிரியனைப் போல் வேடமிட்டு வந்து வாட்போரைத் தூண்டிவிட்டுப் போர் செய்கையில் அவனின் தீமையைச் சொல்லிச் சொல்லி ஒவ்வோர் அங்கமாக வெட்டி வீழ்த்தினார்.

பத்தினியை நினைத்த நெஞ்சை, தொட்ட கையை, விரும்பிப்பார்த்த கண்ணை, இச்சைவார்த்தை பேசிய நாவைக் காக்க முடிந்தால் காத்துக்கொள் எனச் சொல்லிச் சொல்லி ஒவ்வோர் அங்கம் அங்கமாக வெட்டினார். இறுதியில உயிர்ப் பிழைக்க முடியாதபடி தலையினையும் வெட்டி வீழ்த்திவிட்டு மறைந்தார் இறைவன் என்கிறார் பரஞ்சோதியார்.

குறத்தியை நினைத்த நெஞ்சைக் குறித்துரை நாவைத்தொட்ட
கரத்தினைப் பார்த்த கண்ணைக் காத்தனை கோடி என்றென்
றுரைத்துரைத் தவற்றுக்கெல்லாம் உறுமுறை தண்டம் செய்து
சிரத்தினைத் தடிந்து வீட்டித் திருவுரு மறைந்து நின்றான்.

சண்டையைப் பார்த்து வியப்படைந்த மக்கள் ஆசிரியரைப் பாராட்ட அவரது வீட்டிற்குச் சென்றபோது, அவர் கோயிலுக்குப் போயிருப்பதாக மனைவி சொல்லக் கேட்டவர்கள் எதிர்ப்பட்ட வாளாசிரியரைப் பாராட்டினர். இப் பாராட்டுக்கான காரணத்தை அறியாத ஆசிரியர் அதிசயித்தார். மனைவியும் அதிசயித்து சித்தனாம் கீழ்மகன் தன்னிடம் முன்பு தகாததாக நடந்து கொண்டதைக் கூறக்கேட்ட யாவரும் இது மதுரை ஆலவாய் அண்ணலின் திருவிளையாடல் என்றே வியந்தனர்.

ஆக தீமை எந்த வகையிலேயும் களையப்பட வேண்டும் என்பதே இப்புராணக் கதையின் கருவாக இருந்தாலும், குறிப்பாகப் பாலியல் வன்கொடுமைக்கான தண்டனையாக ஒவ்வோர் அங்கங்களையும் வெட்டியதாகக் கூறியதிலிருந்து எந்தக் காலத்தில் அது நடந்தாலும் அதற்கான தண்டனை கடுமையானதாக இருக்க வேண்டும் எனத் தெரிவதோடு தண்டனையிலிருந்து எந்தக் காரணங்கொண்டும் தப்பிக்கச் செய்து விடக்கூடாதென்பதும் புராணம் உணர்த்தும் பாலியல் கொடுமைக்கான தண்டனை என்க!

இக்கதைப் பாங்கின் ஆசிரியரே தம் மாணாக்கனுக்குத் தண்டனையளித்திருக்கலாம் என்பதாகப் புனைவதினும் ஆண்டவனே ஆசிரியராக வந்து தண்டித்தான் என்பதில் ஓர் உண்மையுள்ளது எனலாம்.

மனிதரான ஆசிரியர் அந்தக் கீழ்மகனை மன்னித்துத் தண்டனையிலிருந்து தப்பிக்கச் செய்தாலும் நீதிதேவன் தண்டனையிலிருந்து தப்பிக்க முடியாதென்பதே புராணம் காட்டும் பேருண்மையாகும். மேலும், ஒரே வழி மாணாக்கனான கீழ்மகன் சித்தனுக்குத் தண்டனையே தந்தாலும் ஆசிரியர், தன் மனைவிக்கான களங்கத்தை, சமூகத்தால் ஏற்படும் பழிச்சொல்லை அறவே தீர்த்துவிட முடியாததாகையால் ஆசிரியர் தோற்றத்தில் வைரத்தை வைரத்தால் அறுத்தல் என்றபடி வந்து திருவிளையாடல் புரிந்த ஆண்டவனது கருணை மதுரையை ஆண்ட அரசனால் போற்றப்பட்டதோடு வாளாசிரியருக்கும், அவர்தம் மனைவிக்கும் ஊரறிய அரசு மரியாதை கிட்டுவதாகக் கதையை முடிப்பதால் களங்கமற்ற பெண்ணியம் போற்றப்பட்டது எனலாம்.


## சைவ சமயப் பயிற்சி வகுப்பு

திருப்புகலூர் அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில் வளாகத்தில் அப்பரடிகளின் ஐக்கிய விழாவினை முன்னிட்டு நமது ஆதீனம் சார்பில் 17-04-2014 முதல் 23-04-2014 வரை காலை மாலை இருவேளையும் சைவ சமயப் பயிற்சி வகுப்பு வழக்கம் போல் இந்த ஆண்டும் சிறப்பாக நடைபெறவுள்ளது. பயிற்சியாளர்களுக்கு உணவும், தங்குமிடமும் வழங்கப்பெறும். பயிற்சி வகுப்பு முடிவில் பயிற்சி பெற்றவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்படும். இதில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன்

**தொடர்பு முகவரி**

**மேலாளர், வேளாக்குறிச்சி ஆதீனம், திருப்புகலூர் - 609 704,**
**நாகப்பட்டினம் மாவட்டம், போன் - 04366-236300**

# ஒரூஉ

ஆறுவிரல் ஐம்பொறி
வீரசோழபுரம்

செந்தமிழ் மொழி இலக்கணத்தில் தொடை வகைகள் ஏழாம். அவை இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, மேற்கதுவு, கீழ்க்கதுவு, முற்று என்பனவாம். இவற்றுள் ஒரூஉத் தொடைகள் ஐந்தும் இரு சீரிடைவெளி விட்டு தொடுக்கப்படுவதைக் காண்போம்.

1. ஒரூஉ மோனை – அம்பற் கொடிஞ்சி நெடுந்தே ரகற்றி
2. ஒரூஉ இயைபு – நிழலே யினியத னயலது கடலே,
3. ஒரூஉ எதுகை – மின்னவி ரொளிவிடந் தாங்கி மன்னிய
4. ஒரூஉ முரண் – குவிந்தசுணங் கரும்பிய கொங்கை விரிந்து
5. ஒரூஉ அளபெடை – காஅயச் செந்நெற் கறித்துப் போஓய்.

ஒரூஉவாம் இருசீ ரிடையிட்டது – யாப்பருங்கலம் – நூற்பா – 19.

சீரிரண் டிடைவிடத் தொடுப்ப தொரூஉத்தொடை – யாப்பருங்கலம் – பக்கம் – 51.

இவ்வெடுத்துக்காட்டுக்களின் வழி ஒரூஉத் தொடை நடுவிரு சீர்க்கண்ணுமின்றி முதற்சீர்க் கண்ணும் இறுதிச் சீர்க்கண்ணும் வரத் தொடுப்பது என்பதை அறியலாம்.

ஒரூஉத் தொடை மட்டும் நடுவிலுள்ள (இடையிலுள்ள) இரு சீர்களை நீக்கித் தொடுக்கப்படுவதால் ஒரூஉ என்ற சொல்லுக்கு நீக்குதல் என்று பொருள்.

ஒரூஉ, ஒருவு, நீக்கு, விலக்கு, பிரி, தவிர், ஒழி, கைவிடு என்பன ஒரு பொருள் குறித்த பல சொற்கள்.

திருவள்ளுவர், ஒருவுக, ஒருவுதல், ஒரூஉ ஆகிய மூன்று சொற்களை மூன்று குறட்பாக்களில் மட்டும் பயன்படுத்தியுள்ளார். அவற்றைக் காண்போம்.

1. என்றும் ஒருவுதல் வேண்டும் புகழொடு
நன்றி பயவா வினை. (குறள் – 652)

நன்மை உண்டாகாத செயல்களை நீக்கி விட வேண்டும். இஃது இக்குறளின் பொருள் சுருக்கம்.

2. மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்தும்
ஒருவுக ஒப்பிலார் நட்பு. (குறள் 800)

பொருள் கொடுத்தாயினும் ஒப்பிலார் நட்பை நீக்குக. இஃது இக்குறளின் பொருள் சுருக்கம்.

3. உறின்நட்டு அறின்ஒரூஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்? (குறள் – 812)

பயனுள்ளபோது நட்பு கொண்டு பயனில்லாத போது நீக்கிவிடும் நட்டைப் பெற்றால் என்ன? இழந்தால் என்ன? இஃது இக்குறளின் பொருள் சுருக்கம்,

வள்ளுவர் வழி நின்று நன்மைகளைச் சேர்த்துச் சேர்த்து தீமைகளை நீக்கி நீக்கி வாழ்தலே பெருமைக்குரியது.

# வாசகர் வாசகம் (2)

## செந்தமிழைப் போற்று

புதினத்தின் மொழிநடையாம் விழிதிறந்து
புகழ்குறளின் உரைகாணும் வழி புகன்று
அதிரசமாய் இலக்கியத்தின் வளர்ச்சி சொல்லி
அழகுறவே ஒன்பதின்ஒய் யாரம் நல்கி
மதிக்குணர்த்தும் மருதத்து மக்கள் வாழ்க்கை
மற்றந்த களிமண்ணாம் வாழ்வைக்காட்டி
பொதிந்துள்ள வள்ளலார்தம் கவித்துவத்தைப்
போற்றுமுயர் செந்தமிழாம் இதழைப் போற்று!

அன்புடன்,
**பாவலர் அறிவரசன், திருலோக்கி**

# சாக்ரடீசின் தணியாத் தாகம் !

கவிவேந்தர் கா. வேழவேந்தன்

ஏன்? எதற்கு? எப்படி? என் றிந்த மண்மேல்
எழிற்கேள்வி வடிவத்தில் இருப்போர் தாமே
நான்வணங்கும் ஆசிரியர்; இவர்கள் இன்றேல்
நயமறியா முட்டாளாய் வாழ்ந்திருப்பேன் !
யான்ஒன்றை நிச்சயமாய் அறிவேன் என்றால்,
யான்ஏதும் தெரியாதோன் என்ப தொன்றே !
தாஎ்யார்என் றுலகிற்குத் தன்னைப் பற்றி
சாக்ரடீஸ் பெருமகன்தான் இதுபோல் சொன்னார் !

இளைஞர்களைத் தெருமுனையில் கூட்டி வைத்தே,
எதையும்நீர் ஆராய்ந்தே ஏற்பீர் ! காணும்
விளைநிலத்தில் பயிர்ஏது? களைதான் ஏது?
விழியூன்றிப் பாருங்கள் ! என்றார்; மூடத்
தளைகளுக்குள் சிக்குண்ட சிலரோ கூடித்
தவறென்றார்; குற்றமென்றார்; நஞ்சைத் தந்தே
களைப்பின்றிப் பேசிவந்த ஞானச் செம்மல்
கதை முடிக்கத் தீர்ப்பளித்தார்; சிறைசெய்திட்டார்.

அன்றிரவு விடியும்வரை சாக்ரடீசும்
அயராமல் ஒருநூலைப் படிக்கக் கண்டோன்,
ஒன்றும்மை நான்கேட்பேன், விடிந்தால் உங்கள்
உயிர்போகும்; பின்னிரவும் படிப்பா? என்றான்
நன்றுள்ள இந்நூலை முடிப்பேன், நாளை
நற்பனுவல் இதைச்சுவைக்க முடியுமா யென்னால் !
என்றென்றும் மறைவில்லா ஏந்தல் சொன்ன
இப்பதிலால் சிறை காப்போன் சிலிர்த்துப் போனான் !

# கைந்நிலையில் அகவெளிப்பாடுகள்

வீ. விஜயலட்சுமி
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் கைந்நிலை என்ற நூலும் ஒன்று. கார் நாற்பது, ஐந்திணை ஐம்பது, ஐந்திணை எழுபது, திணைமொழி ஐம்பது, திணை மாலை நூற்றைம்பது என்னும் ஐந்து அகப்பொருள் குறித்த நூல்களுக்குப்பின் ஆறாவதாக 'கைந்நிலை' என்னும் இந்நூல் அகப்பொருள்துறையில் அமைந்துள்ளது. 'கை' என்பதற்கு ஒழுக்கம் என்பது பொருள். குறிஞ்சி, முல்லை. மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளின் ஒழுக்கத்தைப் பற்றிக் கூறுகின்ற நூல் என்பதால் கைந்நிலை எனப்பெயர் பெற்றுள்ளது. ஒவ்வொரு திணைக்கும் பன்னிரண்டு பாடல்களாக மொத்தம் அறுபது பாடல்களைக் கொண்டுள்ளது.

இந்நூலை மாறோக்கத்து முள்ளி நாட்டு நல்லூர்க்காவிதியார் மகனார் புல்லங்காட்டனார் என்பவர் இயற்றியுள்ளார். இந்நூலில் ஆற்றலில் சிறந்த தலைவனும். நாற்குணம் உடைய தலைவியும் கண்டு விரும்பி ஒன்று சேருகின்றனர். இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு, பாங்கர்க் கூட்டம், பாங்கியர் கூட்டம் மூலமாக இருவரும் ஒன்று சேர்கின்றனர். பின் தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்வயிற்பிரிகிறான். அப்போது அவன் தலைவியிடம் நான் உன்னைப் பிரியேன், பிரிந்தால் உயிர்தரியேன் என்று சூளுரைத்துச் செல்கிறான். குறித்த காலம் வந்தும் அவன் வராததால் நெய்தல் நிலத் தலைவி கடலினைப் பார்த்து ஏங்கி நிற்கிறாள். கடலானது அலைகளை வீசுவதிலேயே சிந்தையாய் இருப்பதால் தன் தலைவன் சூளுரையைக் கவனித்திராது என்றும், அங்குள்ள அன்றில் பறவைகள் தங்களுக்குள் கொஞ்சிக் கொள்வதால் அதுவும் கவனித்திராது என்றும் எண்ணி அங்குள்ள நாரைகள் மீனுக்காகக் காத்திருக்கும் பொழுது கவனித்திருப்பதாக எண்ணிய தலைவி நாரையிடம் கூறுவதாகவும் அமைக்கப்பட்டுள்ளது. இந்நூலில் தலைவி, தோழி, பாணர் தலைவனுக்கும் வாயில் மறுக்கும் நிகழ்வுகள், ஊடல் நிகழ்வுகள் சிறப்புக்குரியன. அகவெளிப்பாடுகள் சிறந்த முறையில் அமைக்கப்பட்டுள்ளன. அறுபது பாடல்களில் பல பாடல்கள் சிதைந்த நிலையில் உள்ளன. அவற்றுள் சிதையாமல் இருக்கும் பாடல்களில் மட்டும் புல்லங்காடனார் வெளிப்படுத்தும் அகவெளிப்பாடுகளை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

தலைவி என்பவள் நற்றாயின் மகள். இவள் தலைவன் ஒருவனுடன் எதார்த்த நிலையில் சந்திப்பு நிகழ்ந்து பின் ஒருவருக்கொருவர் அன்புற்று வாழ்கின்றனர். அந்நிலையில் காட்டுப்பசுக்கள் வாழ்கின்ற சோலையில் இளமையான குரங்குகள் தாவித்திரியும் மலைநாட்டுத் தலைவனின் அணிகலன்கள் அணிந்திருக்கும் மார்பானது தன் மனதைத் தேய்த்து நடப்பதாகக் கூறுகிறாள். அதாவது தலைவனின் மார்பு தன் நெஞ்சில் திரிவதாய்த் தலைவி குறிப்பால் உணர்த்தும் பாடல்.

மரையா உகளும் மரம்பயில் சோலை

உரைசால் மடமந்தி ஓடி உகளும்

புரைநீர் மலைநாடன் பூண்ஏந்து அகலம்

உரையா வழங்கும் என் நெஞ்சு

என்பதால் அறியமுடிகிறது. இப்படியாகத் தலைவியுடன் பழகும் தலைவனை நினைத்து தலைவியானவள் ஏங்கித் தவிக்கிறாள். அவனின் நினைவு பற்றிக் கூறும் போது மலையின் மீது ஏறி ஆண்குரங்குகள் பகல் பொழுதிலே வாழைப் பழங்களை உரித்து வாயில் வைத்து அதைக் கன்னத்தில் அடக்கிக் கொண்டு விரைவாய் ஓடும். அப்படியான மலைநாடனாகிய தலைவனின் சிறப்பினைச் சொல்ல எண்ணிய அளவிலேயே என் கைவளையல்கள் நெகிழ்ந்து விடுகின்றன என்பதை, சொல்லச் சொரியும் வளை என்று தன் மனத்திடையே கொண்ட காதலை வெளிப்படுத்துகிறாள் தலைவி. இவ்வாறு ஒருவருக்கொருவர் அன்பை ஆழப்படுத்திக் கொள்ளும் அழகு சிறப்பு வாய்ந்தது. அந்த நிகழ்வு கொள்ளும் நாட்களில் தலைவன் தலைவியைச் சேர்வதற்கு இரவிலே வருகின்றான். அவ்வாறு இரவினிலே வந்தால் ஏற்படும் துன்பத்தினை உணர்ந்த தலைவி அவனை இரவிலே வரவேண்டாம் என்றும் பகற்பொழுதிலே வரவேண்டும் என்றும் குறிப்பாக உணர்த்துகிறாள். மேலும் அவன் காடுகள் சூழ்ந்த மலையிலிருந்து கையில் வேலேந்தி இப்பொழுது வருவான் என்று நினைக்கும் போது என் கண் இமைகள் எவ்வாறு உறங்கும்? என வினவித் தான் உறங்காமல் இருக்கும் நிலையையும் தலைவனின் வருகையையும் தன் மனத்தில் நினைத்து வருந்துகிறாள். அதனை,

இன்னே வரும் கண்டாய் தோழி இடையாமத்து

என்னை இமைபொரு மாறு.....

என்னும் பாடல் அடிகளால் வெளிப்படுத்துகிறாள். தலைவன் பொருட்டு என் மனம் காதலால் வருந்துகின்றது என்று தலைவி ஆசையின் தேம்பும் நெஞ்சு - (3) எனத் தன் காதல் வெளிப்பாட்டையும் அவனுக்காகத் தான் ஏங்கும் வகையையும் உணர்த்துகிறாள்.

தலைவனும், தலைவியும் ஒருவருக்கொருவர் அன்பு கொண்டு இயற்கைப்புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பகற்குறி, இரவுக்குறி என்ற நிலையில் வாழ்ந்து வரும் நாட்களில் தலைவன் விரைவில் தன்னைத் திருமணம் செய்து கொள்ள வேண்டும் எனத் தலைவி ஆசைப்படுகிறாள். அப்படியான வேட்கையைத் தன் தோழியிடம் மொழிகிறாள். தோழி தானே செவிலியது மகளே எனத் தொல்காப்பியம் தோழியை அறிமுகப்படுத்துகிறது.

தலைவனோ வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிகிறான். அவ்வாறு பிரியும் நிலையில் அவன் பாலை நிலத்தின் வழியே பிரிந்து செல்வதால் அவ்வழியில் ஆந்தைகள் மரப்பொந்துகளில் இருந்து ஒலியெழுப்பும், அக்காட்டிடையே உள்ள மான்கள் தாகம் கொண்டு தண்ணீர் குடிக்கச் செல்லும் போது அங்கு தண்ணீர் இருக்காது, கானல் நீர் மட்டுமே இருக்கும். அதைத் தண்ணீர் என நினைத்துச் செல்லும்.

மேலும் அக்காட்டில் கொல்லும் தொழிலுடைய வேடர்கள் எமனைப் போல் வில்லோடு காய்ந்த இலைகளை ஒலி எழுப்பி நடந்து செல்லும் காட்டுப்பகுதி. அப்படியான கொடிய பாலை நிலத்தின் வழியே சென்ற எம் தலைவனை நினைத்து என் மனம் துன்புறுகிறது. அவர் பிரிவை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை என்று ஏங்கித் தன் அகவெளிப்பாட்டை,

பண்பில் அஞ்சுரம் என்பவரால் ஆய்தொடி
நண்பிலார் சென்ற நெறி — கைந்நிலை, பா. 24

என்ற அகவுணர்வு வார்த்தைகளால் அறிந்து கொள்ள முடிகிறது. இப்படியாகத் துன்பப்படும் தலைவியிடம் தோழியானவள், கொடிய பாலை நிலக்காட்டில் பிரிந்து சென்ற நம் தலைவரின் வருகையை ஒலி மூலம் பல்லியானது கூறுகிறது. மேலும் உன் நெற்றியில் உள்ள பசலை நீங்கி நெற்றியில் ஒளியுண்டாயிற்று. ஆறலைக் க்ள்வர்கள் திரிந்து கொண்டிருக்கும் காட்டு வழியில் பிரிந்து சென்ற நம் தலைவர் விரைவில் திரும்பி வருவதை நாம் இல்லக் கதவினைத் திறந்து காண்போம், எனவே நீ வருந்தாதே எனத் தோழியானவள் தன் தலைவியைத் தேற்றுகிறாள்.

தலைவியும் தலைவனும் இல்லறம் நடத்தும் பொழுது ஏற்படும் ஊடல் பற்றி மருதத்திணையின் உரிப்பொருளான ஊடலும் ஊடல் நிமித்தமுமான நிகழ்வுகளை ஆசிரியர் படம்பிடித்துக் காட்டுகிறார். தலைவன் பரத்தையிடம் சென்று வருகிறான். அதனால் பாணனை வாயிலாக வைக்கிறான். இதனையறிந்த தலைவி,

பொழெனப் பொய் கூறா தொழி என நீ பொய் கூறாது இரு எனக்கூறி வாயில் மறுக்கிறாள். இப்படியாகப் பாணற்கு வாயில் மறுக்கும் நிகழ்வுகள் எட்டுப் பாடல்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஊடல் கொண்டு இருக்கும் தலைவியின் கோபத்தைத் தணிக்க தோழியானவள் மலர்மாலையணிந்த எம் புதல்வனை நெற்றிச் சுட்டி அசைய இல்லத்திற்கு அழைத்து வருகிறான் எனக்கூறி ஊடலைத் தூவி கை முயலுகிறான். ஆனால் தலைவியோ,

தண்துறை ஊரன் தடமென் பணைத் தோளாய்
வண்டுது கோதை வகைநாடிக் – கொண்டிருந்து
கோல வனமுலையும் புல்லினான் என்றெடுத்துச்
சாலவும் தூற்றும் அலர் கைந்நிலை, பா. 44

என்னும் பாடலின் வழியே பரத்தையிடம் சென்றதால் அலர் தூற்றப்படும் எம் தலைவனை எப்படி வரவேற்பேன் எனக் கூறி வாயில் மறுக்கும் நிகழ்வுகளும் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளன.

திணைமொழி ஐம்பது என்ற நூலைப் போலவே இந்நூலும் குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்றும் திணை முறையில் எழுதப்பட்டுள்ளது. அவ்வகையில் இந்நூலின் இறுதியில் நெய்தல் திணைப் பாடல்கள் இடம் பெற்றுள்ளன. நாற்பத்தொன்பதாம் பாடலில் இருந்து நெய்தல் திணைக் குறித்த பாடல்கள் இடம் பெற்றுள்ளன. அவ்வகையில் இத்திணைக்கே உரித்தான இருத்தல் நிமித்தப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. தலைவி வரைவு வேண்டலும், இரவுக்குறிக்கு அஞ்சுதலும், சிறைப்புறமாகத் தலைவி தோழிக்குக் கூறுவது போல் கூறுவதும், பொருள் தேடத் தலைவன் வரைவிடைவைத்துச் செல்லுதலும், தலைவி ஏங்கி மொழிதலுமான செய்திகளும், காமம் மீதூரிய தலைவி கடற்கரையில் உள்ள உயிரினங்களுடன் தன் வேட்கையைப் பதிவு செய்வதாகவும் எழுதியுள்ளார்.

நெடுங்கடல் சேர்ப்ப நின்னோ (டு) உரையேன்
ஒடுங்கு மடற்பெண்ணை அன்றிற்கும் சொல்லேன்
கரும்கூளில் தான்கண்டு கானலுள் மேயும்
தடந்தாள் மடநாராய் கேள் கைந்நிலை, பா. 50

என்னும் பாடலில் நெய்தல் நிலத் தலைவனிடமும், அன்றில் பறவையிடமும் நான் ஒன்றும் சொல்லமாட்டேன். நாரையே உன்னிடம் மட்டுமே சொல்கிறேன். இயற்கைப் புணர்ச்சியின் போது பிரியேன். பிரிந்தால் உயிர்த்தரியேன் எனக் கூறிச் சென்ற தலைவன் இன்னும் வரவில்லை எனப் புலம்புகிறாள். மேலும், அவனை என் நிலை கூறி அழைத்து வா என்றும்,

# ஆசிரியர் குழு

திரு. இரா. குருசாமி பி.ஏ.,

பெரும்புலவர் திரு. இரா. இளங்குமரன்

முனைவர் திரு. தமிழண்ணல்

முனைவர் திரு. கதிர் மகாதேவன்

முனைவர் திரு. க. சின்னப்பா


தொடர்பு முகவரி

ஆசிரியர்

செந்தமிழ்
மதுரைத் தமிழ்ச் சங்கம்
54, தமிழ்ச் சங்கச் சாலை
மதுரை - 625 001
தொலைபேசி : 0452 - 6575615



பதிப்பாசிரியர் : **இரா. அழகுமலை,** எம்.ஏ., எம்.ஃபில்.
செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை – 1
தொலைபேசி : 0452 - 6575615

அச்சிடுவோர் : **தவம் பிரிண்டர்ஸ்,** 32, மேலமாசி வீதி, மதுரை – 1

RNI Regd. No. 5508/57 March 2014 MA/130/2014-2016

Posted at Madurai BPC on 25th of every month


# செந்தமிழ்க் கல்லூரி



## மதுரைத் தமிழ்ச் சங்கம்

[ தேசியத் தரக்கட்டுப்பாட்டுக் குழுவின் B+ தேசியத்தரம் பெற்றது ]

மதுரை காமராசர் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது.

54, தமிழ்ச் சங்கம் சாலை, மதுரை – 625 001 ✆ 0452 - 2343707, நிகரி : 0452 - 4373475

- இளம் இலக்கியம்
- இளங்கலை
- முதுகலை
- இளம்நிலை ஆய்வாளர்
- முதுநிலை ஆய்வாளர்
- பி.ஏ., பி.லிட்., எம்.ஏ., மாணவர்களுக்கான தமிழாசிரியர் பயிற்சி

நன்கொடை கிடையாது

**சிறப்பு அம்சங்கள்**

மாணவர்களுக்குக் கணினிப் பயிற்சி, யோகா மற்றும் தியானப் பயிற்சி, ஓலைச்சுவடி மற்றும் கல்வெட்டுப் பயிற்சி, பேச்சுக்கலைப் பயிற்சி, படைப்பாக்கத் திறன், விரிவுரையாளர் தகுதித் தேர்வுப் பயிற்சி போன்றவற்றில் சிறப்புப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

**செம்மொழித் திட்டத்தின் கீழ் பணி வாய்ப்புக்கள் உள்ளன**

முனைவர் மு. மீனா
முதல்வர் (பொறுப்பு), செந்தமிழ்க் கல்லூரி

இரா. குருசாமி
செயலாளர், செந்தமிழ்க் கல்லூரி


அனுப்புநர்,

**செயலாளர்**
மதுரைத் தமிழ்ச் சங்கம்
மதுரை – 625 001

*From*

**SECRETARY**
Madurai Tamilsangam
Madurai - 625 001
TAMILNADU, S. INDIA

பெறுநர் / To,

Printed by **V. Govindarajan**, published by **R. ALAGUMALAI** M.A., M.Phil. on behalf of **Madurai Tamil Sangam, Madurai** and printed at **Davam Printers, 32, West Masi Street, Madurai - 1**, and published at **54, Tamil Sangam Road, Madurai.** Editor **R. ALAGUMALAI** M.A., M.Phil.